STC No. 325/2023 20.11.2025

PW1 சரவணன் த/பெ. பெருமாள்

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**மனுதாரர்தரப்பில் குறுக்குவிசாரணை**

எனது சொந்த ஊர் எது என்றால் மேலூர். நான் தற்போது மேலூரில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் ரியல் எஸ்டேட் தொழில் மீடியேட்டராக செய்து வருகிறேன். ரியல் எஸ்டேம் மீடியேட்டராக எத்தனை ஆண்டுகளாக தொழில் செய்து வருகிறேன் என்றால் 15 வருடம். எனது வயது என்ன என்றால் 45. 15 வருடங்களுக்கு நான் என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் சொந்த வண்டி இல்லை, சரக்கு வேன் டிரைவராக இருந்தேன். ரியல் எஸ்டேட் தொழிலிருந்து ஆண்டு வருமானம் எவ்வளவு என்றால் வியாபாரம் சரியாக இருந்தால் ரூ.5 லட்சம் வரும். வியாபாரம் சரியாக இல்லாத காலத்தில் ரூ.2 லட்சம் ஆண்டு வருமானம் வரும் என்றால் சரிதான். எனக்கு எந்த வங்கியில் கணக்கு உள்ளது என்றால் மேலூர் கனரா வங்கியில் கணக்கு உள்ளது. நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் 2 வருட காலமாக வருமான வரி செலுத்தி வருகிறேன். எதிரி செய்யது முகமது எவ்வாறு எனக்கு பழக்கம் என்றால் அவரது தந்தை லாரி வைத்திருந்தார் அதன் மூலம் எனக்கு பழக்கம். எதிரியின் தந்தை உயிருடன் இல்லை என்றால் சரிதான்.

2) எதிரிக்கு எந்த தேதியில், எங்கு வைத்து கடன் கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து ரூ.7 லட்சம் கடனாக கொடுத்தேன். எவ்வளவு நாட்களாக எதிரி என்னிடம் கடன் கேட்டார் என்றால் 2, 3 நாட்களாக கடன் கேட்டார், பின்னர் நான் பணம் கொடுத்தேன். எதிரி

என்னிடம் கடன் கேட்கும்போதோ, பணம் வாங்கும்போதோ எதிரி மட்டும்தான் வந்தாரா என்றால் எதிரி என்னிடம் கடன் கேட்க வந்தபோது எதிரியின் நண்பர் திருஞானம் என்பவர் உடன் இருந்தார். கடன் கொடுக்கும்போது என்னுடன் வேறு யாராவது இருந்தார்களா என்றால் இல்லை, நான் மட்டும்தான் இருந்தேன். நான் சொன்ன தேதியில் எதிரிக்கு கடன் கொடுக்கவில்லை, நான் சொல்வது போல் எதிரிக்கு ரூ.7 லட்சம் கடன் கொடுப்பதற்கு என்னிடம் வசதி இல்லை என்றால் சரியில்லை, அன்றையதினம் நகையை அடகு வைத்த பணம் ரூ.4 லட்சம் என்னிடம் இருந்தது மற்றும் என்னிடம் கையில் இருப்பாக 2,5 லட்சம் பணம் இருந்தது. நான் எந்த வங்கியில் அடகு வைத்தேன் என்றால் கனரா வங்கியில் அடகு வைத்தேன்.

3) நான் இதற்கு முன்னாள் சொன்னதுபோல் 2, 3 நாட்களுக்கு முன்னர் எதிரி கடன் கேட்டு வந்ததாகவே, கையில் கையிருப்பாக ரூ.2.5 லட்சம் இருந்ததாகவோ, நகையை அடகு வைத்த பணம் ரூ.4 லட்சம் இருந்ததாகவோ, எனது புகார், எனது வழக்கறிஞர் அறிவிப்பு, நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**(எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது ).**